**THE LABOUR COURT, SALEM**
**C.P.No.28 Of 2021**

17.04.2025

**MW1 –** திரு. மாலதி
குறுக்கு விசாரணை தொடர்ச்சி – (மனுதாரர் தரப்பில்)

மனுதாரருக்கு கடைசியாக பெற்ற மாதஅடிப்படை சம்பளப்படிதான் தற்போது வரை ஓய்வூதியம் கணக்கிட்டு வழங்கி வருகிறோம் என்றால் சரிதான். மனுதாரரின் மாத அடிப்படை சம்பளம் ரூ.11,945/– மற்றும் தரஊதியம் ரூ.2,300/–. மனுதாரருக்கு உண்மையாகவே அடிப்படை சம்பளம் ரூ.13,415/–ம் தரஊதியம் ரூ.4,200/–ம் கணக்கிட்டு அதன் அடிப்படையில் ஓய்வூதியம் வழங்கப்படவேண்டும் என்றால் இல்லை. நான் வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றும், மேற்சொன்ன அடிப்படை சம்பளப்படிதான் ஏற்கனவே அவருக்கு பணிக்கொடை வழங்கப்பட்டுள்ளது என்றால் பணிக்கொடை சம்பந்தமான ஆவணங்கள் எங்கள் பிரிவில் பார்க்கப்படுவதில்லை.

என்னிடம் காட்டப்படும் பணிக்கொடை சம்பந்தப்பட்ட அலுவலர் உத்தரவில் மனுதாரருக்கு அடிப்படை சம்பளமாக ரூ.13,415/–ம் தரஊதியம் ரூ.4,200/– என்றும் அகவிலைப்படி 100%–ப்படி 17,615/– என்ற அடிப்படையில் பணிக்கொடை கணக்கிடப்பட்டு வழங்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. அடிப்படை சம்பளமாக ரூ.13,415/–ம் தரஊதியம் ரூ.4,200/– என்ற அடிப்படையில்தான் மனுதாரருக்கு ஓய்வூதியம் கணக்கீடு செய்யப்படவேண்டும் என்றால் இல்லை. தவறான கணக்கீட்டின் அடிப்படையில் மனுதாரருக்கு ஓய்வூதியம் கணக்கிட்டு கொடுத்துவருகிறோம் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு ஓய்வுகாலப்பலன்களை அவர் ஓய்வு பெற்ற 31.05.2014 அன்று தரவில்லை என்றும், காலதாமதமாக ஓய்வுகாலப்பலன்களை கொடுத்ததற்கு நிர்வாகம் 18% வட்டி தர

கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 6% வட்டி அனைவருக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. 6% வட்டி எந்த தொகைக்கு எந்த நாள் வரை கணக்கிடப்பட்டு மனுதாரருக்கு கொடுக்கப்பட்டது என்ற விபரம் மனுதாரருக்கு தெரியப்படுத்தப்படவில்லை என்றால் சரிதான். நடப்பு அகவிலைப்படி கணக்கிட்டு மனுதாரருக்கு ஓய்வூதியம் வழங்கப்படவேண்டும் என்றால் அனைவருக்கும் ஒரேமாதிரியான அகவிலைப்படி கணக்கிடப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

மறுவிசாரணை இல்லை.

Sd/ (M. Shanthi)
Presiding Officer,
Labour Court, Salem